Registered as a Newspaper

Essay Writing
PRACTICE A/L
ENGLISH GRAMMAR
by
S. B. IYAR
சனி / ஞாயிறு:
மாலை 3 மணி - 5 மணி
ஆரம்பம்: 31 - 01 - 1987
12, வைமன் வீதி,
நல்லூர்.

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

Spoken English
with
GRAMMAR
by
S. B. IYAR
சனி / ஞாயிறு
காலை: 10 மணி - 12 மணி
ஆரம்பம்: 31 - 01 - 1987
12, வைமன் வீதி,
நல்லூர்.

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஹூ தை மீ 17 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 29 (30-01-1987) **UTHAYAN** A LIVELY TAMIL DAILY கதிர் 55

இலங்கை அரசை நிர்ப்பந்திக்குமாறு இந்திய எதிர்க்கட்சிகள் கோரிக்கை

புதுடில்லி ஜன, 29

யாழ்ப்பாணம் மீது விதிக்கப்பட்டுள்ளபொருளாதார முற்றுகையை நீக்கும்படி கேட்டு இலங்கை அரசுமீது நிர்ப்பந்தம் செலுத்தும்படி இந்திய எதிர்க்கட்சிகள் இந்திய மத்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளன.

இது சம்பந்தமான மகஜர் ஒன்று கடந்த புதன்கிழமை புதுடில்லியில் ஜனாதிபதி ஜெயில் சிங்கிடம் கையளிக்கப்பட்டது.

ஜனதாக் கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர், திராவிடக் கழகச் செயலாளர் திரு கி வீரமணி தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் தலைவர் திரு. ப. நெடுமாறன் உட்பட சில எதிர்க்கட்சித் தலைவர்கள் இம் மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் உண்மை நிலையை மதிப்பிட இந்தியக்குழு ஒன்றை அங்கு அனுப்பி வைக்கும்படியும் இந்திய அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் மகஜர் மூலம் கோரியுள்ளன (இ—ஏ)

கூட்டத் தொடர் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 30

நடாளுமன்றத்தின் தற்போதைய கூட்டத் தொடர் ஒத்திவைக்கப் பட்டது.

புதிய கூட்டத் தொடர் பெப் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்

அன்றைய தினம் ஜனாதிபதி, அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்துவார்.

கல்லுண்டாய் வெளியில்

புலிகளின் விமானம் நேற்று மீண்டும் பரீட்சிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 30

விடுதலைப் புலிகளின் விமானம் மீண்டும் நேற்று பரீட்சார்த்தமாக பறக்கும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டது.

நேற்றிரவு எட்டு மணி அளவில் கல்லுண்டாய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொக்கட்டிச்சோலையில் 2 ஆம் நாள் அட்டகாசம்

50 அப்பாவித் தமிழர் சுட்டு எரிக்கப்பட்டனர்

பெண்கள், குழந்தைகளின் சடலங்களை விட்டுவிட்டு மக்கள் காடுகளுக்குத் தப்பி ஓட்டம்

மட்டக்களப்பு, ஜனவரி 30

பட்டிருப்புத் தொகுதியில், கொக்கட்டிச்சோலையில் இரண்டாவது நாளாக அரசாங்கப் படைகள் பயங்கரவாதம் புரிந்தன. அட்டகாசம் நடத்தின. அடாவடித்தனம் செய்தன.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட துருப்புகள் அங்கு மும்முனைத் தாக்குதல் நடத்தி, ஐம்பதுக்கும் மேற்பட்ட 'அப்பாவி' மக்களைச் சுட்டுக் கொலைசெய்துவிட்டு சடலங்களை முகாம்களுக்கு எடுத்துச் சென்று பின்னர் எரித்தனர் என அறியவந்தது.

படையினர் அனேகமாக ஆண்களின் சடலங்களையே எடுத்துச்சென்று எரித்தனர். எனினும் தப்பிய பெண்கள் குழந்தைகளின் சடலங்களை எடுக்க முடியாத நிலையில், அவற்றை விட்டுவிட்டு மக்கள் காடுகளுக்குள் ஓடி ஒளித்தனர். இவ்வாறுகச் சுமார் இருபதினாயிரம்பேர் காடுகளுள் ஒளித்திருப்பதாக அறியவந்தது.

ஆயுதப்படையினர் சிலரைப் பிடித்துப் பணயக் கைதிகளாக வைத்திருந்தனர் என்றும், வீடுகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தினர் என்றும், அறிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலைக்கிராமத்தில் கடந்த புதன், வியாழனில் ஆயுதப்படையினர் நடத்திய மும்முனைத் தாக்குதலில் ஐம்பதுக்கும் அதிகமான தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தனர்என்று அறிவிக்கப்படுகிறது.

வயல்வெளிகளில் மேலும் பல பொதுமக்களின் சடலங்களும் காணப்பட்டன.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் இராணுவ வாகனங்களில் ஏற்றப்பட்டு படை முகாம்களுக்குக் கொண்டுபோகப்பட்டன. அங்குவைத்து சடலங்கள் அடையாளங் காணப்படாமலே எரிக்கப்பட்டன. இப்படி நேரிற் பார்த்தவர்கள் தெரிவித்தனர் என்று ஆகாஷ்வாணி அறிவித்தது.

இரண்டாயிரம் படையினர் சுற்றிவளைப்பு

2000க்கு அதிகமான ஆயுதப் படையினர் 25 சதுரமைல் விஸ்தீரணம் அடங்கிய பிரதேசத்தை முற்றுகையிட்டு தரை, கடல், ஆகாயமார்க்கங்களில் வந்து தாக்குதல்களை நடத்தினர்

சடலங்களைவிட்டு ஓடினர்

அப்பகுதியில் இருந்து உயிர் தப்பி வந்தவர்களின்படி பெண்கள்,குழந்தைகளின் சடலங்களை விட்டுவிட்டு கிராமவாசிகள் இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர் என்று பி. பி. சி. அறிவித்தது.

கிராமத்தில் உள்ளவீடுகள் பல எரிக்கப்பட்டன பிடிக்கப்பட்ட பொது

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ இருபது கொமாண்டோ பலி!

மட்டக்களப்பு, ஜன 30

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் கடந்த புதன் காலை இடம் பெற்ற நிலக்கண்ணி வெடித் தாக்குதலிலும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற மோதலிலும் 20 பொலீஸ் கொமாண்டோக்கள் உயிரிழந்தனர் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி

பழைய காலத்தில அரக்கர் கதையில படிச்சதெல்லாத்தையும் இப்ப அரசாங்கப் படையள் செய்யிறதைப் பாக்கவும் கேட்கவும் முடியுது பாத்தியே. . . . !

டிக்ஸிற் பயணம்

கொழும்பு, ஜன. 30

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் நேற்று இந்தியா சென்றார்.

கொக்கட்டிச்சோலை தாக்குதல் குறித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30

புதன்கிழமை 28 ஆம் திகதி மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை - போரதீவுப் பகுதிகளில் நடந்த சம்பவங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அதன் விவரம் வருமாறு:-

கடந்த 28ஆம் திகதி காலை 6-30 மணி அளவில் வெல்லாவெளி, துணடி, கல்லடி, காத்தான்குடி, சாடியனூறு, வவுணதீவு ஆகிய இடங்களில்அமைந்துள்ள முகாம்களில் இருந்து வந்த பல நூற்றுக்கணக்கான கொமாண்டோக்கள் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சுற்றிவளைத்தனர்.

முதல் கட்டமாக ஹெலிக்கொப்டர்கள் மூலம் நூற்றுக் கணக்கான கொமாண்டோக்கள் மட்டுநகரின் பல பாகங்களிலும் இறக்கி விடப்பட்டனர்.

இவர்கள் முற்றுகைக்காக முயன்று கொண்டிருந்த சமயம் மட்டுநகரினுள் தரைமார்க்கமாக நுழைவதற்காக வெல்லாவெளி முகாமில் இருந்து வந்த ரோந்துப் படையினரின் கவசவாகனம் ஒன்றின்மீது எமது வீரர்கள் தரைக்கண்ணி வெடித் தாக்குதல் நடத்தினர்.

கவசவாகனம் முற்றாக சிதறியது. அதில் இருந்தவர்கள் அனைவரும் அந்த இடத்தில், கொல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆனையிறவு முகாமுக்கு லலித் திடீர் விஜயம்

போக்குவரத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜன. 30

நேற்று விசேஷ ஹெலிக்கொப்டர் மூலம் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆனையிறவு இராணுவ முகாமுக்கு விஜயம் செய்தார் என்று தெரிய வருகிறது

அமைச்சர் முகாமில் இருந்த வேளை ஹெலிக்கொப்டர் ஒன்று முகாமில் வட்ட மிட்டுத் திரிந்தது.

வாகனப் போக்குவரத்துகளும் சுமார் ஒரு மணி நேரம் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இதன் காரணமாக யாழ்தேவி இணைப்புச் சேவை பஸ்கள் தாமதமாகவே சென்றன.

எரிபொருள் தடையை அடுத்து வானப்போக்குவரத்துகளின் சேவை பற்றியும் அமைச்சர் அறிந்து கொண்டதாக தெரிய வருகிறது. (இ-10)

புலி இயக்கத்தில் 10 ஆயிரம் பேர்

கொழும்பு ஜன. 30

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சுமார் பத்தாயிரம் போராளிகள் உள்ளனர்.

இப்படி புலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்தியப் பத்திரிகையாளர் திரு. எஸ். வெங்கட் நாராயண் " த ஐலண்ட் " கொழும்பு நாளிதழில் எழுதியிருக்கிறார்.

திரு. வெங்கட் நாராயண் யாழ்ப்பாணம் வந்து புலிகள் இயக்க பிராந்தியத் தளபதி திரு. கிட்டு மற்றும் பிரமுகர்களைச் சந்தித்துப் பேட்டி கண்டார்.

அவர் எழுதுவதாவது;

புலிகளின் முகாம்களுக்கும் தடுப்பு அணைகளுக்கும் நான் சென்றேன்.

புலிகள் பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தனர்.

அந்த ஆயுதங்களில் சில வருமாறு:

* ரஷ்யன் ஏ கே. 47 துப்பாக்கிக்கு இணையான சீன ரி 56 துப்பாக்கி
* இத்தாலியன் பரேடா சப்மெஷின் துப்பாக்கிகள்
* அமெரிக்கத் தயாரிப்பான மக்னம் .375 ரிவோல்வர்கள்
* அமெரிக்க தயாரிப்பான .381 விசேட ரிவோல்வர்கள்
* .9 எம். எம். செக். பிஸ்டல்கள்
* எம். 165 கிரனேட் லோஞ்சர்கள்
* சோவியத் தயாரிப்பான ஆர். பி ஜி. 7 வி எஸ். (இ-ஏ)

குடாநாடு இன்று முற்றாக ஸ்தம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ் குடாநாடுமுழுவதும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

யாழ் பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு இந்த ஹர்த்தாலை ஒழுங்குசெய்துள்ளது.

தமிழ்மக்கள் மீதான ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான அட்டூழியங்கள் ஒழியவேண்டும் எனவும் —

வடபகுதி மீதான எரிபொருள் தடை நீக்கப்படவேண்டுமெனவும் —

கிழக்கு மாகாணத்தில் பெரும் பகுதிகளில் அரசின் கூலிப் படைகள் தமிழ்மக்களைக் கொன்றுகுவித்து வருவதைக்கண்டித்தும் — இன்றைய ஹர்த்தால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இன்றைய ஹர்த்தாலை ஆதரிக்குமுகமாக சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டிருக்கும்.

இதற்கான வேண்டுகோளை யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்துள்ளது.

போக்குவரத்துக்கள் அனைத்தும் இன்று முற்றாக ஸ்தம்பித நிலையில் இருக்கும்

அவசர தேவைகளுக்கு மட்டும் வாகனங்கள் எடுத்துச் செல்லப்படும்.

கொழும்பு சேவை, யாழ்தேவி இணைப்பு சேவைஅனைத்தும் இன்று நிறுத்தப்பட்டிருக்கும்.

இதற்கான வேண்டுகோளை வடபிராந்திய மினிபஸ் போக்குவரத்துச்சங்கம் விடுத்துள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகளும் இன்று நடைபெறமாட்டா.

ஆட்டோக்கள், டாக்ஸிகள் எதுவும் இன்று சேவையில் ஈடுபடமாட்டாது.

வங்கி ஊழியர்களும் கடமைக்குச்செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரசைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாடசாலைகள், கல்லூரிகள் எதையும்இன்று இயங்கமாட்டா.

தனியார் கல்வி நிறுவனங்களும் இன்று மூடப்பட்டிருக்கும்.

ஆஸ்பத்திரியில் அத்தியாசிய தேவைகள் மட்டுமே இன்று நடைபெறும்.

அவசரசிகிச்சைப்பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, அவசர நோயாளர் அனுமதிக்கும் பிரிவு ஆகியவை மட்டுமே இன்று இயங்கும்.

ஒவ்வொரு பிரிவிலும் குறைந்த ஊழியர்களே கடமையில் ஈடுபடுவர்.

கிளினிக்குகள் திறக்கப்படமாட்டா.

அரச அலுவலகங்களும் இன்று மூடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊழியர்கள் கடமைக்குச் செல்வதை நிறுத்திக் கொள்ளவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (இ-10)

சுபநேரம்

30—01—1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
6. 36 முதல் 8. 06 வரை
ராகுகாலம்:
11 06 முதல்12 36 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

பறையனாளங்குளத்தில் தப்பியவர் தகவல்:

எரிந்துகொண்டிருந்த அண்ணனின் சடலம் மீது தம்பியை உயிருடன் தூக்கிப் போட்டனர்

— க. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஜன. 30

அண்ணனின் இறந்த உடல்மீது தம்பியை உயிருடன் தூக்கிப் போட்டு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தினர் சிப்பாய்கள்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை வவுனியா பறையனாளங்குளத்தில் நடந்த சிப்பாய்களின் தாக்குதலின்போது காயமடைந்து மயிரிழையில் உயிர் தப்பிய செல்லையா திருச்செல்வம் (23வயது) இவ்வாறு சொன்னார்.

இவர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

இத்தாக்குதலில் ஆறு பேர் மட்டுமே கொல்லப்பட்டனர் என்பது தற்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம்பற்றி உதயன் செய்தியாளரிடம் செல்லையா திருச்செல்வம் கூறியதாவது:-

ஞாயிற்றுக் கிழமை நானும் என்னுடன் மேலும் ஐந்து பேரும் வவுனியாவில் இருந்து மண்ணெண்ணெய் வாங்கிக்கொண்டு எமது ஊர் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தோம்.

சைக்கிளின் பின்னால் மண்ணெண்ணெய் கலன்களை கட்டியிருந்தோம். சிலர் பெற்றோலும் எடுத்து வந்தனர்

முன்னால் டிராக்டர்

பறங்கியனாறு பகுதியில் நாம் வந்துகொண்டிருந்த பொழுது எமக்கு முன்னால் ஒரு டிராக்டரும் சென்று கொண்டிருந்தது.

டிராக்டர் பெட்டியினுள் ஒரு மோட்டார் சைக்கிளும் இருந்தது.

டிராக்டரை விலத்திப் போவதற்கு நாம் 'சைட்' கேட்டபொழுது சாரதி "சைட்" தராமல் தொடர்ந்தும் டிராக்டரை ஓட்டிச் சென்று கொண்டிருந்தார்.

ஆற்றைக்கடந்தபோது சூடு

அந்த வீதியில் உள்ள ஆற்றை டிராக்டர் கடந்து செல்லும் வரை நாம் சைக்கிள்களை நிறுத்திவிட்டு அவ்விடத்தில் நின்றோம்.

டிராக்டர் ஆற்றுக்குள் இறங்கியதும் காட்டுப் பகுதியில் இருந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

டிராக்டர் சாரதியின் தலையை துப்பாக்கிக் குண்டு தாக்கியதும் சாரதி ஆற்றினுள் முகம் குப்புற விழுந்தார் சாரதிக்கு அருகில் இருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜெய்ப்பூர் கால் தொழிற்சாலைக்கான உதயன் -- சஞ்சீவி உதவி நிதி

* * *

முழு விவரமும்
ஞாயிறு (01-02-87) உதயனில்

* * *

ஊனமுற்றோரை
ஒதுக்கி வைக்காதீர்கள்.
அவர்களுக்கு மறுவாழ்வு
கொடுங்கள். தயங்காதீர்கள்
இயன்றவரை உதவிபுரியுங்கள்.

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

காணவில்லை

680191050 V இலக்கத்தையுடைய எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன் சின்னத்துரை - முனீஸ்வரன், உசன், மிருசுவில்.

சோமசுந்தரம் பிறேமநாதன் ஆகிய எனது அடையாள அட்டையுடன் மணிபர்ஸும் 27-01-87 அன்று பரந்தனுக்கும் தருமபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்குமாறு வேண்டுகின்றேன் தகுந்த சன்மானம் வழங்கப்படும்

புதிதாக விண்ணப்பித்தோரின் ஒய்வூதியம் தாமதம்

தலைமைக் கந்தோர் இடம்மாற்றம் காரணம்

யாழ்ப்பாணம், ஜன.30

கொழும்பிலுள்ள ஓய்வூதிய தலைமைக்காரியாலய இடம் மாற்றத்தால் பல புதிய ஒய்வூதியக் காரர்களின் கொடுப்பனவுகள் வரத் தாமதமாகின்றன

ஒய்வூதியத் தலைமைக் கந்தோர் கடந்த வருட இறுதியில் கொழும்பு புறக்கோட்டையிலுள்ள கப்பிரிக்கூன் ரவர் கட்டடத்திற்கும் இடம்மாற்றப்பட்டது

இதனால் பல ஓய்வூதியக் காரர்கள் அனுப்பிய சுய விவரக் கோவைகள் அங்கே போய்ச் சேரவில்லை.

விவரங்களை அனுப்பியுள்ள வடபகுதியைச் சேர்ந்த பலருக்கு, ''விவரங்கள் வந்துசேரவில்லை. மீண்டும் அனுப்பு'' என்று திணைக்களம் கடிதங்கள் அனுப்பியுள்ளது.

இதனால் பல ஓய்வூதியக்காரர்கள் திகைப்படைந்துள்ளனர்.

இவர்களை புறக்கோட்டை கப்பிரிக்கூன் ரவர் கட்டடத்திலுள்ள தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் கச்சேரி ஓய்வூதிய பிரிவு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

வீட்டுஉடைமை உச்ச வரம்பு சட்டம்நீக்கம்

கொழும்பு, ஜன. 30

வீட்டு உடைமை உச்ச வரம்புச்சட்டத்தை நீக்குவது என்று அமைச்சரவை முடிவு செய்தது.

இதற்கான சட்டவிதிகளைத் தயாரிக்க அமைச்சர் உபகுழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

ஹர்த்தாலுக்கு அன்னையர் முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், ஜன30

இன்று வெள்ளிக்கிழமை பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக்குழு நடத்தும் ஹர்த்தாலுக்கு அன்னையர் முன்னணியும் தனது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

சகல பெண்களும் இன்றைய தினத்தில் பூரண ஹர்த்தாலை அனுஷ்டித்து தேவாலயங்களில் பிரார்த்தனைகள் மேற்கொண்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று முன்னணித் தலைவி திருமதி எல். குணநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார், (இ-5)

இளவாலையில்பிரார்த்தனைப் பேரணி

இளவாலை, ஜன 30

இளவாலை மறைவட்ட இறை பக்தர்களின் மாபெரும் பிரார்த்தனைப் பேரணி இடம் பெறவிருக்கிறது.

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5மணிக்கு இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் இது நடைபெறும். (இ-48)

வேகமாக வரும் மினிபஸ்கள்

யாழ். பஸ் நிலையப் பகுதியில் அதி வேகமாக வரும் தனியார் மினி பஸ்களினால் பெரும் விபத்துகள் ஏற்படும் அபாயம் இருந்து வருகிறது.

ஷெல்லுக்குப் பயந்து பெரும்பாலான பொதுமக்கள் மின்சார நிலைய வீதியையே பயன் படுத்துகிறார்கள்

இந்த வீதியால் வரும் மினிபஸ்களே அதிவேகமாக வருகின்றன என்று பொது மக்கள் புகார் செய்கின்றனர். (இ-10)

காச நோயாளர் தொடர்ச்சியாக சிகிச்சை பெறச் சங்கம் உதவும்

சுன்னாகம், ஜன. 30

காச நோயாளர்களைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. அவர்கள் தொடர்ச்சியான சிகிச்சையைப் பெற வசதி அளிக்கவும் வேண்டும். சிகிச்சைக்குப் போக பணவசதி அற்ற நோயாளருக்கு பண வசதிகளையும், மருந்து எடுக்க ஊக்குவிப்பு அலவன்ஸுகளையும் வழங்க எமது சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

சர்வதேச காசநோய் தடுப்புச் சங்கத்தின் வலி - தெற்குப் பிரிவின் செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய செயலாளர் திரு. க. தங்கவேலாயுதம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். பொன்னுத்துரை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் வட பிரதேச காச நோய் தடுப்பு அதிகாரி திரு. பேரானந்தநாயகம் பேசுகையில்; யாழ் மாவட்டத்திலே காச நோயாளர்கள் ஏழாலைப் பகுதியிலேயே அதிகமாக உள்ளனர் என்றும், நோய் பரவாமல் தடுப்பதற்கு மக்கள் ஒத்துழைப்பு அவசியம் என்றும் கூறினர்.

மார்ச் மாதம் காச நோய் தடுப்பு கொடி தினத்தை நடத்துவது எனவும் தீர்மானிக்கப் பட்டது. (இ-27)

புங்குடுதீவில் நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன30

மு. பொன்னம்பலம் எழுதிய 'விடுதலையும் புதிய எல்லைகளும்'', ''முற்றத்துப் பூக்கள்,, நூல்களின் வெளியீட்டு விழா புங்குடுதீவில் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெறும்

புங்குடுதீவு றோமன்கத்தோலிக்க வித்தியாலயத்தில் நடைபெறும் இவ் விழாவிற்கு டாக்டர் சி. கணேச தலைமை வகிப்பார்

புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. க. கருணாகரன் முதற்பிரதியைப் பெற்று நூல்களை வெளியிட்டு வைப்பார்.

புலவர் ஈழத்து சிவானந்தன் தலைமையில் திரு சோ பத்மநாதன், திரு.வி.ரி இளங்கோவன் கவிஞர் க. திருச்செல்வம், திரு சு குணரெத்தினம் ஆகியோரின் விமர்சன அரங்கும் இடம் பெறும். (இ-5)

சேவாச்சிரமம் உதவி

பருத்தித்துறை.ஜன 30

பருத்தித்துறையில் அண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் வீரமரணம் எய்திய திரு. எஸ். வைகுந்தவாசன் (வின்சன்) குடும்பத்திற்கு நிவாரணநிதி வழங்கப் பட்டது.

பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருபானந்தா ரூ 1000 வழங்கினர். (இ-118)

மண்டைதீவு நூலக ஆலோசனைக் குழு

மண்டைதீவு, ஜன 30

மண்டைதீவு பொதுசன நூல் நிலையத்தின் ஆலோசனைக் குழுவின் விசேஷ கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

ஆலோசனைக் குழுத் தலைவர் திரு. சு. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதிய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு நூலகப் பொறுப்பாளர் திருமதி நவநீதரம்பை சச்சிதானந்தம், திருமதி இப்போலிற்று (ஆசிரியை), திரு. என் இராமச்சந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-88)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

விஞ்ஞான முறையிலான சுகாதார அறிவுரைகள்

வடபகுதி மக்களுக்குத் தேவை

யாழ்ப்பாணம், ஜன30

தற்போதைய ஆயுத உபகரணங்களால் வடபகுதி மக்களின் உணவு, நீர், வளிமண்டலம் என்பன மாசுபடுத்தப்படுகின்றன.

இவற்றின் பாதிப்புக்களில் இருந்து தப்ப மக்கள் அனைவரும் விஞ்ஞான முறையிலான சுகாதார அறிவுகளைக் கொண்டிருக்கவேண்டும்.

சென் ஜோன் அம்புலன்ஸ் சேவையின் வடபிராந்திய ஆணையாளரும், யாழ் மாவட்ட வளர்ந்தோர் கல்வியதிகாரியுமான திரு. சி எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

வவுனியா வை. எம். சி. ஏ கட்டட மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர்களுக்கான சுகாதார கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து அவர் பேசினார்.

வளர்ந்தோர் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் 35 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு வாரம் நடைபெற்ற இக்கருத்தரங்கில் முதலுதவி, சுற்றுடல் சுகாதாரம், சுகாதாரக் கல்வி வகுப்புக்கள் இடம் பெற்றன. (இ-5)

'தியாகசீலம்' சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், ஜன30

மழலைச் செல்வங்களின் மேம்பாடு கருதி அமைக்கப்பட்ட 'தியாக சீலம்' சிறுவர் பூங்கா ஆரம்ப வைபவம் பெப்ரவரி முதலாம் திகதி நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு கிட்டு இதனை ஆரம்பித்து வைப்பார். ஆனைக்கோட்டை கல்வி வளர்ச்சிக் கழகத்தில் அமைக்கப்பட்ட இப் பூங்காவின் ஆரம்ப விழாவுக்கு திரு. ச. நமசிவாயம் தலைமை வகிப்பார். பல கலைநிகழ்ச்சிகளும் அங்கு நடைபெற உள்ளன.

விளக்கவுரையை மானிப்பாய் பிரதேச பொறுப்பாளர் திரு. மயூரன் நிகழ்த்துவார். (இ-10)

கொக்குவில் இந்துவிலும் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.30

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆண்டு 6க்கான மாணவர்களை அனுமதிக்கும் போட்டிப் பரீட்சை நாளை 31ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் (இ)

தொண்டமானாற்றில் இடம்பெயர்ந்தோருக்கு நிவாரண உதவி

யாழ்ப்பாணம், ஜன 30

இராணுவத்தினரின் அட்டகாசத்தால் தொண்டமானாறுபகுதிகளில் இருந்து வெளியேறியவர்களுக்கு ஜனவரி மாத நிவாரணம் வழங்கப்படுகிறது.

இதன்படி 594 குடும்பங்கள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் தமது நிவாரணத்தைப் பெறுகின்றன.

இதற்கான ஒழுங்குகளை யாழ் அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டு செய்திருந்தார் என தொண்டமானாறு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. தி. முருகதாசன் தெரிவித்தார்.

இதற்கிடையில் பெப்ரவரிமாத நிவாரணத்தையும் வழங்க உதவி செய்வதாக அரச அதிபர் உறுதி அளித்துள்ளார். (இ-5)

பிரஜைகள் குழு தலைவரும் இடம் பெயர்வு

காங்கேசன்துறை, ஜன 30

மயிலிட்டி தெற்கு பிரஜைகள் குழுத் தலைவர் படையினரின் தாக்குதலுக்குள்ளாகி தமது வீட்டை விட்டு இடம் பெயர்ந்துள்ளார்.

ரோந்து வந்த படையினர் மயிலிட்டி தெற்கில் உள்ள பிரஜைகள் குழுத் தலைவரும், முன்னாள் கிராம சபைத் தலைவரும், இளைப்பாறிய உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியுமான திரு. எஸ் அருணாசலத்தைத்தாக்கி காயம் உண்டுபண்ணியதாகக் கூறப்படுகிறது

இதனால் அவர் இடம் பெயர்ந்து வேறிடத்துக்குச் சென்றுள்ளார்.

மயிலிட்டி தெற்கில் நிலவும் பதற்றம் காரணமாக ஏராளமான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன (இ-68)

9 மாதமாக மலத்தியோன் இல்லை நுளம்புக்கு 'எல்சன்'

யாழ்ப்பாணம், ஜன 30

யாழ். மாநகரசபைக்கு கொழும்பு சுகாதார திணைக்களத்திலிருந்து கடந்த 9 மாதங்களாக மலத்தியோன் கிருமிநாசினி அனுப்பப்படவில்லை.

இதனால் மாநகரசபைப் பகுதியில் கடந்த 9 மாதங்களாக நுளம்புக்கு மலத்தியோன் தெளிக்கப்படவில்லை.

தற்போது மக்களின் சுகாதார வசதிகளை மனதில்கொண்டு யாழ் மாநகரசபை தனது நிதியிலிருந்து 'எல்சன்' கிருமி நாசினியை வாங்கி தெளித்து வருகின்றது.

மலத்தியோன் கிருமிநாசினியை உடன் பெற்றுத் தருமாறு உள்ளூராட்சி திணைக்களத்தை மாநகரசபை கேட்டுள்ளது என ஆணையாளர் தெரிவித்தார். (இ-5)

பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு இளைஞர் சேவைத் திட்டம்

காரைநகர், ஜன 30

யாழ் குடாநாட்டு மக்கள் கல்வி, பொருளாதாரம் போன்ற பலவழிகளில் அகதிகளாக்கப்பட்டு வருகிறார்கள்.

சீரழிந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு மாவட்ட இளைஞர் சேவைத் திட்டத்தின் மூலம் ஒன்றுபடுங்கள்.

இவ்வாறு யாழ் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திரு. கார்த்திக் காரைநகர்முற்போக்கு இளைஞர் மன்றத்தின் செல்வா கல்வி நிலையத்தில் நடத்தப்பட்ட வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு திரு சி. குமாரவேலு தலைமை வகித்தார்.

திரு. கார்த்திக் தொடர்ந்து பேசியதாவது:-

''தொழில்களினால் வேறுபட்ட சமூக அந்தஸ்து நிலைப்பாடு இன்று மாறிவிட்டது

எல்லோரும் எல்லாத் தொழில்களையும் ஆற்றும் நிலை வந்துவிட்டது. எனவே நீங்கள் இறால் வளர்ப்பு, தும்புத் தொழில் போன்றவைத் தொழில் திட்டங்களை அமைத்துப் பயன்பெற வேண்டும்.''

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

மூலிகை தோட்டத்துக்கு ரூ. 25 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜன 30

கைதடி ஆயுள்வேத சித்த வைத்தியசாலையின் மூலிகைத் தோட்டத்திற்கென மாவட்ட அபிவிருத்திச்சபை நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாவை அரச அதிபர் ஒதுக்கியுள்ளார்.

சென்ற வருடம் ஆரம்பிக்கப்பட்ட மூலிகைத் தோட்ட பராமரிப்பு வேலைகளுக்கும், சித்த ஆயுள்வேத வைத்திய துறையினரை ஊக்குவிக்குமுகமாகவும் இப்பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

மினிசினிமாக்காரரை ஆணையாளர்

குடும்பமாக இருந்து பார்க்கக்கூடிய படங்களை திரையிடக்கோருகிறார்

யாழ்ப்பாணம், ஜன 30

வயது வந்த மகள், மகன் பெற்றோர் குடும்பமாக இருந்து பார்க்கக்கூடிய வகையிலான படங்களை மினி சினிமாக்களில் திரையிடுங்கள்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ.வி கே சிவஞானம் மினி சினிமா உரிமையாளர்களை இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

மினி சினிமா உரிமையாளர்களை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் சந்தித்து கலந்துரையாடுகையிலேயே இவ்வாறு ஆணையாளர் கூறினார்.

முன்னர் சினிமாத் தியேட்டர்கள் மூல வருடாந்தம் 30 லட்ச ரூபா வருமானம் [illegible] கிடைத்து வந்தது.

தற்போது ஒருசதமாவது கிடைப்பதில்லை.

மினி சினிமா உரிமையாளர்கள் தமது திரையரங்குகளுக்கான அனுமதி லைசென்ஸை மாநகர சபையிடம் பெற வேண்டும்.

ரிக்கெட்டுகளுக்கான வரியையும் கட்ட வேண்டும்.

ரசிகர்களுக்கு சுகாதார, இருக்கை வசதிகளைச் செய்யாத மினி சினிமாக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்களின் சமகால சிந்தனைகளை மழுங்கடிக்கும் வகையிலான, கலாசார சீரழிவான ஆபாச திரைப்படங்களை திரையிடும் மினி சினிமாக்களும் தடை செய்யப்படும்.

இவ்வாறு ஆணையாளர் கூறினார். (இ-5)

யாழ் கல்வித் திணைக்களத்தின் நெல்லியடி வலயம் அடுத்த வாரம் செயற்படும்

பொறுப்பதிகாரியும் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ் கல்வித்திணைக்களத்தின் நெல்லியடி கல்வி வலயம் எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி முதல் செயற்படும்.

அதன் பொறுப்பதிகாரியாக யாழ்கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு.வி. தங்கராஜா கடமையாற்றுவார்.

பருத்தித்துறை, உடுப்பிட்டி கல்வி வட்டாரங்களுக்கும், அவற்றின் கீழ் உள்ள 8 கொத்தணி அமைப்புக்களுக்கும் இவர் பொறுப்பதிகாரியாகக் கடமை புரிவார். (உ-5)

எமது எழுத்தாளரின் நூல்களை விற்பனையும், அறிமுகமும் செய்ய மக்கள் முன்வர வேண்டும்

''சத்தியங்கள்'' வெளியீட்டில் உரை

யாழ்ப்பாணம், ஜன 30

''இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக நாம் என்ன செய்கின்றோம்? அவர்களது நூல்களில் ஒன்றை மட்டும் வாங்கிவிட்டால் போதுமா? உண்மையில் புதிய படைப்புக்களை நாம் விற்பனை செய்வதிலும் எமது உறவினர்கள், நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும் முன்நிற்க வேண்டும். இந்தியாவில்நான் சென்றிருந்தபோது அங்கு ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு மவுசு இருப்பதை அறிந்தேன்,

தனுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு.வே. கந்தசாமி இவ்வாறு கூறினார்.

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தில் நடைபெற்ற நெல்லை க. பேரனின் ஐந்தாவது வெளியீடான 'சத்தியங்கள்' சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினர்.

கலாசார கூட்டுறவுப் பெருமன்றத் தலைவர் திரு க. சிதம்பரப்பிள்ளை விழாவிற்குத் தலைமை வகித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு வே தங்கராசா பேசுகையில், ''பேரனுடைய சிறுகதைகள் அத்தனையும் யதார்த்தமானவை. அவர் கற்பனைகளைக் கதைகளாக எழுதுவது கிடையாது'' என்றார்.

எழுத்தாளர் திரு. யாழ்வாணன் பேசுகையில் ''கடந்த இருபது ஆண்டுகளைப் பேரனின் கதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன'' என்றார்.

திரு சி வன்னியகுலம் பேசுகையில் 'பேரனது கதைகள் இயல்பானவை. உயிர்ப்புகள் தொகுதியில் வந்த ''பிறந்தமண்'' கதைகூட மிகவும் இயல்பானது. அது பற்றி பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்த கருத்துக்கள் முரணானவை'' என்றார்.

எழுத்தாளர் தெணியான், திரு செ. யோகராசா, திருமதி கோகிலா மகேந்திரன், செல்வி சந்திரா தியாகராசா ஆகியோரும் உரையாற்றினர்.

நெல்லை க. பேரன் பதிலுரை நிகழ்த்துகையில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வரவேற்பதாயும் தமக்கென்று தனியான நடையிலேயே எப்போதும் எழுத விரும்புவதாயும் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் திரு.க. சிதம்பரப்பிள்ளை வரவேற்புரையையும் நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வே. தில்லைநாதன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தினர். (இ)

மண்டைதீவு - குருநகர் மேலதிக படகுச்சேவை

மண்டைதீவு, ஜன. 30

மண்டைதீவு இறங்குதுறையிலிருந்து குருநகர் துறையடிக்கு மேலதிக படகுச் சேவை ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மண்டைதீவுப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் வெளியூர் ஆசிரியர்களின் போக்குவரத்து வசதியை முன்னிட்டு இந்த விசேட படகுச் சேவை தினமும் நடைபெற்று வருகின்றது.

இந்தப் படகுச்சேவை காலை 8 மணிக்கு குருநகர் இறங்குதுறையிலிருந்து புறப்பட்டு மண்டைதீவு இறங்குதுறையை 8 45க்கு அடையும்

பின்பு இப்படகு பிற்பகல் 2.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மாலை 3 30 மணிக்கு குருநகர் துறைமுகத்தை அடையும்.

இப்படகுச் சேவையில் பிரயாணம் செய்யும் ஆசிரியர்கள், வைத்தியசாலை ஊழியர்களுக்குப் போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 15 மட்டும் அறவிடப்படுகின்றது

ஏனைய பிரயாணிகளுக்கு வழமைபோல் கட்டணம் அறவிடப்படுகின்றது.

படகுச்சேவை விஸ்தரிப்பால் இங்குள்ள தனியார் மினிபஸ் சேவை வருமானம் குறைந்து வருவது குறித்து தனியார் மினி பஸ் நடத்துனர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள்.

இதன் முதல் நடவடிக்கையாக கடந்த வியாழக்கிழமை ஒரு நாள் முழுவதும் மினி பஸ் சேவை நடத்தாமல் நிறுத்தப்பட்டிருந்தது.

இப்பகுதிப் பிரயாணிகள், பொது ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் கொண்ட குழு பங்குத்தந்தையுடனும் படகு உரிமையாளர்களுடனும் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது

அதைத் தொடர்ந்து தனியார் மினி பஸ் சேவை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மண்டைதீவிலிருந்து அராலித்துறை வரை நடைபெறுகின்றது. (இ-88)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

இவ்வுலகப் பந்தங்கள் எல்லாம் நிலையில்லாதனவே இன்று அவையே சாரமும் பயனும் எனத் தோன்றும். ஆனால் நாளை அவை மறைந்து விடும். இறைவனுடன் உள்ள தொடர்பே உண்மையானது.

– அன்னை சாரதாதேவி

உதயன்

இல,15,ஆஸ்பத்திரி ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 30-1-1987 த.பெ.23

இன்றைய ஹர்த்தால்; பூரண வெற்றியாகட்டும்

மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்த மகாத்மா காந்தி அடிகளின் நினைவு தினம் இன்று. அன்பையும், அகிம்சையையும் ஆத்மீக வாழ்வையும், சாத்வீகத்தையும் போதிப்பதோடு நிற்காமல் தானே வாழ்ந்து காட்டிய மாமனிதர் அவர். அந்த மகானை கொலைவெறியன் — வன்செயல் விரும்பி ஒருவன் சுட்டுக்கொன்றது ஜனவரி 30ஆம் திகதி ஆகும்.

அறவழிப் போராட்டங்களை அறிமுகப்படுத்திய அடிகளாரின் நினைவு தினமான இன்று ஹர்த்தால் எனப்படும் ஒருவகை அறப்போராட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில் நடக்கவிருக்கிறது. இன்றைய தினத்தை ஹர்த்தால் நடத்துவதற்குத் தேர்ந்து எடுத்தமை மிகவும் பொருத்தமானதாகும்.

ஹர்த்தால் அனுஷ்டிப்பதன் மூலம் காந்தி மகானை யாழ்மாவட்ட மக்கள் பரந்த அளவில் நினைவு கூர்வதாகின்றது. அத்தோடு, அவர் காட்டிய அகிம்சை வழி — அறவழிப்போராட்டங்களில், இந்த நெருக்கடியான காலத்திலும், ஈழத் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை என்பதையும் இன்றைய ஹர்த்தால் உலகுக்கு எடுத்து உரைக்கும்.

சமாதானத்திலும், சாத்வீகத்திலும் அசையாத நம்பிக்கை உள்ள தமிழ் மக்கள், அட்டூழியத்தின், அதர்மத்தின், அக்கிரமத்தின் எல்லையில்தான் ஆயுதங்களை ஏந்தினர்கள் என்பதை உலகம் அறியவும் இது ஒருவாய்ப்பை ஏற்படுத்தும்.

கிழக்கில் நடக்கும் மனித உரிமை மீறல்களை, அரசாங்கப் பயங்கரவாதத்தை — இனப்படுகொலையைக் கண்டித்தும்—

வடக்கு மக்கள்மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடைகளைக் கண்டித்தும்.

அரசுக்கு எதிரான போராட்டத்தை சர்வதேச ரீதியில் இனங்காட்டவும் — இன்றைய ஹர்த்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

குடாநாட்டு மக்கள் அனைவரும் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்து ஆலயங்கள், தேவாலயங்களில் பிரார்த்தனையில் ஈடுபட உள்ளனர். வர்த்தகர் சங்கம், தனியார் போக்குவரத்துச் சங்கம் என்பன ஹர்த்தாலுக்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்க முன்வந்திருக்கின்றன. ஆதலால் இன்றைய ஹர்த்தால் போராட்டம் பூரண வெற்றி தரும் என்று எதிர்பார்க்கிறோம் மாவட்டத்தில் உள்ள பிரசைகள் குழுக்கள் இதனை ஏற்பாடு செய்திருப்பதால் சகல பிரசைகளும் ஹர்த்தாலில் பங்காளிகளாக வேண்டும்.

மனிதன் மனிதனை மதிக்கப்படாத கொடுமையை எதிர்த்து மனிதப் பிறப்பின் மாட்சியை உயர்த்துவதற்காக மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில்தான் முதன் முதலில் அகிம்சைப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவர் தொடக்கி வைத்த போராட்டம் இன்னும் அங்கு ஓயவில்லை.

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கலோ அதன் தாக்கத்தில் சருமத்தின் வர்ணத்தைப் பொறுத்தது. இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் இன ஒதுக்கலோ ஆத்மாவையே ஆழமாகப் பாதிப்பது. இவ்வாறு சிந்தனைச் சிற்பி அமரர் சி. கதிரவேற்பிள்ளை கூறிய கருத்து ஞாபகப்படுத்த வேண்டிய ஒன்றாகும்.

தென்னாபிரிக்காவில் மகாத்மா தொடக்கி வைத்த அகிம்சைப் போராட்டம் ஆண்டுகள் பல கடந்தும் இன்று ஆயுதப் போராட்டமாகத் தொடர்கிறது. ஆனால் அது உலக நாடுகளின் ஆதரவைப் பெற்று முதிர்ச்சி அடைந்திருக்கிறது.

தென்னாபிரிக்காவை சமூக ரீதியாகவும், வர்த்தக ரீதியாகவும் பகிஷ்கரிக்கத் தொடங்கிய முதல் நாடு இந்தியா என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்போதும் தென்னாபிரிக்க இன ஒதுக்கலுக்கு எதிராக, இந்தியா முன்னணியில் நின்று வெளிப்படையாக இயங்குகிறது.

அதேபோல, இலங்கை இன ஒதுக்கலுக்கு எதிராகவும் இந்தியா வெளிப்படையாக இயங்குவது அவசியம். ஒளிவு, மறைவு விளையாட்டுப் பயன் தராது.

கொழும்பில் நடந்த இரண்டொரு சர்வதேச மாநாடுகளை இந்தியா பகிஷ்கரித்துள்ளதை நாம் மறக்கவில்லை. அதனை ஆரம்பமாகக் கொண்டு, இன ஒதுக்கலை நிறுத்த மறுத்து வரும், பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க முன்வராதிருக்கும் இலங்கை மீதும் இந்தியா சில பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வந்தால் என்ன? ஏனைய நாடுகளும், நிலையை உணர்ந்து இந்தியாவைப் பின்பற்றலாம் அல்லவா?

இலங்கை அரசாங்கம் தனது சொந்த மக்கள் மீதே பொருளாதாரத் தடை விதிக்க முடியுமானால், சர்வதேச சமூகம் ஏன் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கக்கூடாது?

சர்வதேச சமூகத்தில் அப்படி ஓர் எண்ணக் கிளர்ச்சியை உண்டாக்கும் விதத்தில், இலங்கை அரசின் பொருளாதாரத் தடையை எதிர்த்து இன்று நடக்கும் அகிம்சைப் போராட்டம் பூரணத்துவமாக அமைய வேண்டும். அதற்கு ஒவ்வொருவர் பங்களிப்பும் மிக அவசியம்.

கறுப்பின விடுதலை இயக்கமான

ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் அமெரிக்கா உயர்மட்டப் பேச்சு

வாஷிங்டன், ஜன 29

கறுப்பின விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸுடன் அமெரிக்க அரசு உயர்மட்டப் பேச்சுக்களை நேற்று ஆரம்பித்தது

முதல் தடவையாக தென் ஆபிரிக்க கறுப்பின விடுதலை இயக்கம் ஒன்றுடன் அமெரிக்க அரசு பேச்சுக்களை ஆரம்பித்தது, அமெரிக்க அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

தென் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் ராம்போ அமெரிக்க வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸுடன் நடத்திய பேச்சுக்கள் தீவிர அக்கறையுடன் இருந்தன என்று பி.பி.சி. வானொலி அறிவித்தது

இப்பேச்சுக்கள் தொடரும் என்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிவித்தது.

வன்செயல்களைக் கைவிடும்படி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவரை, அமெரிக்க வெளிநாட்டமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ரஷ்யாவுடன் காங்கிரஸ் வைத்து உள்ள தொடர்பு பற்றியும் அமெரிக்க அமைச்சர் தனது கவலையை திரு ராம்போவிடம் தெரிவித்துக் கொண்டார்.

இதனிடையில் திரு. ராம்போ ஒரு கம்யூனிஸ்ட், பயங்கரவாதி என்று அமெரிக்க செனட்டர்கள் சிலர் கண்டித்தனர்.

'நான் பயங்கரவாதி இல்லை. தென் ஆபிரிக்க அரசாங்கம்தான் உண்மையான பயங்கரவாதி'- இப்படி திரு. ராம்போ பி. பி. சி. செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(இ-எ)

வெளி உலகில்

ஈரானுக்கு ஆயுத விநியோகம்:

முழுப் பொறுப்பையும் றேகன் ஏற்றார்!

வாஷிங்டன், ஜன. 29

ஈரானுக்கு ஆயுதம் விற்பனை செய்தது சம்பந்தமான சகல பொறுப்புகளையும் தான் ஏற்றுக் கொள்வதாக அமெரிக்க அதிபர் ரொனல்ட் றேகன் அறிவித்தார்.

அமெரிக்க காங்கிரஸின் நாடாளுமன்றம், செனட் ஆகிய சபைகளின் கலப்புக் கூட்டத்தில் பேசுகையில் அதிபர் இதனை ஒப்புக்கொண்டார்.

அமெரிக்கப் பிரசை ஒருவரை விடுவிப்பதற்காக இப்பேரத்தில் தான் ஈடுபட்டதாகத் திரு. றேகன் தெரிவித்தார்,

இந்த விஷயத்தில் ஒழுங்கீனம் எதுவும் இருப்பதாகத் தான் கருதவில்லை என்றும் அவர் சொன்னார்.

''நான் செய்த பெருந்தவறு'' - என்றும் திரு றேகன் ஒப்புக்கொண்டார்.

இது சம்பந்தமான ஒழுங்கீனங்கள் எதுவும் இருப்பின் அதுபற்றி விசாரிக்கப்படும் என்றும் அதிபர் றேகன் தெரிவித்தார். (இ-எ)

மிஸோராமில் தேர்தல்

புதுடில்லி, ஜன 29

மிஸோராம் மாநிலத்தில் அடுத்த மாதம் 16 ஆம் திகதி நடைபெறவுள்ள 39 தேர்தல் தொகுதிகளுக்கு 144 பேர் போட்டியிடுகின்றனர்.

மிஸோராம் மாநில அந்தஸ்து பெற்ற பின்னர் நடைபெறும் சட்டசபைக்கான முதலாவது தேர்தல் இதுவாகும்.

(ஒ)

மதுவிலக்குச் சட்டம்: தீவிரப்படுத்த எம். ஜி. ஆர். உத்தரவு

சென்னை, ஜனவரி 29

தமிழ்நாட்டில் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரப்படுத்தும்படி தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் உத்தரவிட்டார்.

விஷம் கலந்த சாராயத்தை குடித்ததால் 9 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து முதலமைச்சரின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விஷம் கலந்த சாராயம் குடித்ததினால் சுகவீனம் பாதிக்கப்பட்ட நிலையில் 40 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக ஒரு நபர் கைது செய்யப்பட்டார். (இ-எ)

தமிழ்நாட்டில் வாந்திபேதி:

இலங்கைதமிழ் அகதிகள் இருவர் மரணம்

மதுரை, ஜன 29

தமிழ்நாடு, கூடலூரில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இரண்டுபேர் வாந்திபேதி காரணமாக உயிரிழந்தனர்.

நந்தினி (வயது 10) பிரான்ஸிஸ்மார்க்(வயது 40) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்,

இந்த அகதி முகாமில் 684 குடும்பங்கள் தங்கியுள்ளன.

பேசாலை, தலைமன்னார், வவுனியா ஆகிய இடங்களில் இவர்கள் வசித்து வந்தவர்கள்.

வாந்திபேதி நோயினால் பாதிக்கப்பட்ட 87 பேர் ஆண்டின்பட்டி காலரா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

(இ-எ)

லெபனான் செல்ல அமெரிக்கருக்கு கட்டுப்பாடு

வாஷிங்டன், ஜன.29

லெபனானுக்கு அமெரிக்கப் பிரசைகள் விஜயம் செய்வது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அமெரிக்க அரசு இது சம்பந்தமான உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

லெபனானில் அமெரிக்கப் பிரசைகள் கடத்தப் படுவதைத் தொடர்ந்தே அமெரிக்க அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

முஸ்லிம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பணயக்கைதிகளாகவைக்கப்பட்டுள்ள அமெரிக்க மற்றும் நாடுகளைச் சேர்ந்த பிரசைகளை உடனடியாக விடுவிக்கும்படி ஐ நா.பாதுகாப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-எ)

ஆப்கன் சதி முறியடிப்பு

லண்டன், ஜன.29

ஆப்கன் அரசுக்கு எதிரான சதிமுயற்சி ஒன்று ரஷ்ய ஆதரவுடன் முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

(இ-உ)

தீமைக்கு எதிராகப் போராடும் மன உறுதி

கடவுளை அறிய அதுவே வழி

இன்று ஜனவரி 30 ஆம் திகதி மகாத்மா காந்தி அடிகளின் நினைவு தினமாகும்.

அதனை யொட்டி அவர் ஆற்றிய உரை ஒன்றிலிருந்து ஒரு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

இவ்வுலகிலுள்ள சகல ஜீவராசிகளையும் அர்த்தமற்ற ஓர் சட்டமாவது ஆண்டுவரவில்லை. ஆனால் எங்கும் வியாபித்துள்ள கடவுளே சகல ஜீவராசிகளையும் ஆண்டு வருகிறார் என்பது சேர். ஜகதீச சந்திரபோஸின் ஆச்சரியமான ஆராய்ச்சியிலிருந்து நன்கு தெரிகிறது. உலகத்திலுள்ள ஜடப் பொருள்களுக்கும் உயிர் இருக்கின்றதென்பதை ஸ்ரீபோஸ் ஆராய்ச்சி செய்து காட்டியிருக்கிறார்.

இவ்வுலகில் ஏற்பட்டுள்ள இயற்கைக் கட்டளையும் ஆண்டவனும் ஒன்றேயாகும். நான் ஆண்டவனையாவது அவரது கட்டளையையாவது மறுக்கமுடியாது. ஏனெனில் அதைப்பற்றியாவது அவரைப் பற்றியாவது எனக்கு ஒன்றுமே தெரியாது.

இந்தப் பூமியில் ஆட்சி செய்து வருபவர்களை நான் புறக்கணித்தால் அல்லது அவர்களைப்பற்றி ஒன்றுமே தெரிந்து கொள்ளா விட்டால் எனக்கு அதனால் யாதொரு பிரயோசனமும் உண்டாகாது.

அது போலவே நான் இறைவனை மறப்பதாலும் அவரது கட்டளையை மறுப்பதாலும் அவரது கட்டளையிலிருந்து நான் எவ்விதத்திலும் தப்பித்கொள்ள முடியாது.

ஆனால் கடவுள் கட்டளையை அடக்கமாகப் பணிவுடனும் அமைதியாகவும் ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் நமது வாழ்க்கையைக் கவலையின்றி நடத்த முடியும்.

சுற்றிலுமுள்ள சகல விஷயங்களும் நாளுக்கு நாள் மாறி வருகின்றன. அழிந்தும் வருகின்றன.

சகல பொருள்களிலும் மாறுதலேற்படுவதற்கு மாறுதலற்ற நிரந்தரமான ஓர் சக்தியே காரணமாகும், அந்தச் சக்தியே இவ்வுலகத்தில் ஆக்கல், அழித்தல் மீண்டும் சிருஷ்டித்தல் முதலிய தொழில்களைப் புரிந்து வருகிறது. அந்த சக்திதான் கடவுள்.

எனது புலன்களால் நான் உணரக்கூடிய சக்தி ஒன்றும் சாசுவதமாக இருப்பதில்லை. ஆனால் அவர் ஒருவரே சாசுவதமாகஇருக்கிறார்.

இந்த உலகில் மரணம் சம்பவித்துக் கொண்டிருப்பினும் ஜனனமும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது; அசத்தியத்தின் நடுவில் சத்தியம் பிரகாசத்துடன் பிரபலமாக விளங்குகிறது; அந்தகாரத்தின் மத்தியில் அருள் சோதிப்பிரகாசத்துடன் தாண்டவமாடுகிறது.

இதிலிருந்து இறைவனிடம் உயிர், சத்தியம், பிரகாசம், இம்மூன்றும் அடங்கியிருப்பது நன்கு தெரிகிறது

கடவுள் அன்பு வடிவம். கருணைக்கடல். மகா புத்திமானாக இருப்பதால் மாத்திரம் பயனில்லை. இறைவனென்றால் தெய்விக சக்தியென்றால் மனதைக் கவர்ந்து நல்ல வழியில் மாற்றத்தை அளிக்க வேண்டும். ஒவ்வொரு பக்தர் செய்யும் அற்ப காரியத்திலும் கடவுள் கிருபை ததும்ப வேண்டும். ஐம்புலன்களுக்கும் புறம்பான தெய்வீக உணர்ச்சியைக் கொண்டே இவ்விஷயங்களைத் திட்டவட்டமாகவும் உண்மையாகவும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

புலன்களின் உணர்ச்சியால் நாம் பெரும்பாலும் ஏமாந்து வருகிறோம். புலன்களுக்குப் புறம்பான உணர்ச்சியைக் கொண்டே தெய்வீக சக்தியைநாம்அறிந்துகொள்ளவேண்டும். வெளித்தோற்றத்தைக் கண்டு தெய்வீக சக்தியை நாம் நிரூபிக்க முடியாது.

இதனைத்தான் பல தேசங்களில் காலத்துக்குக்காலம்இடைவிடாமல் அவதரித்து வந்துள்ள தீர்க்கதரிசிகளும் ரிஷிகளும் தாங்கள் நேரில்அனுபவித்திருக்கிறார்கள். இத்தகைய அனுபவபூர்வமான உணர்வை நாம் நிராகரிப்போமானால் நம்மையே நாம் மறந்துக் கொள்வதாக அது அமையும்.

மகாத்மா காந்தி

மேற்கூறிய தெய்விக உண்மையை அறிந்து கொள்ள சலனமற்ற நம்பிக்கை அத்தியாவசியமாகும். ஒருவர் தமது உள்ளத்தில் கடவுள் வாசஞ் செய்வதை அறிந்து கொள்ள வேண்டுமானல் நம்பிக்கை இருக்க வேண்டும். இன்னும் சத்தியம், அன்பு இவைகளை ஆதாரமாகக் கொண்ட முயற்சியில் நமக்கு நம்பிக்கையும் பக்தியும் இருக்க வேண்டியது அவசியம்.

சத்தியத்திற்கும் அன்பிற்கும் மாறான விஷயங்களையெல்லாம் உதறித் தள்ளிச் சன்மார்க்கத்தில் நடக்க வேண்டுமாயின் இறைவனிடத்தில் நம்பிக்கையையும் பக்தியையும் விருத்தி செய்துகொள்ள வேண்டும்

காரணத்தைக் காட்டிலும் நம்பிக்கை மேலானது எனவே மேற்கூறிய விஷயங்களைக் காரணபூர்வமாக நிரூபிப்பதென்பது முடியாத காரியம்.

இவ்வுலகில் நன்மைகளுடன் தீமைகளும் இருப்பதற்குக் காரணம் என்னவென்றும் எனக்குத் தெரியவில்லை.

அதை அறிந்துகொள்ள நினைப்பது கடவுளுக்குச் சமமாகநானும் வரவேண்டும் என்று நினைப்பதற்கு ஒப்பாகும். இவ்வுலகில் உள்ள தீமைகளைக் கடவுள் வெகு காலமாகப் பொறுத்துக் கொண்டு வருகிறார் என்பதே என் கருத்து.

இறைவனிடம் தீமை என்பது அணுவளவும் இல்லை என்பது எனக்குத் தெரியும். இவ்வுலகத்தில் உள்ள தீமைகளுக்கு அவரே கர்த்தா என்பது நிச்சயம். ஆனால் அந்தத் தீமைகள் அவரை அணுகாது

உயிர்போனாலும் தீமையான காரியங்களைச் செய்யாமல் அதைஎதிர்த்துப் போராடவேண்டும் என்ற உறுதி வேண்டும். இல்லாவிடில் ஒருநாளும் நான் இறைவனை அறிந்துகொள்ள முடியாது என்று அனுபவத்தில் இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி

குறள்

ஆகூழால் தோன்றும் அசைவின்மை
கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

பொருள்

கைப்பொருள் ஆவதற்குக் காரணமான ஆகூழால் சோர்வில்லாத முயற்சி உண்டாகும்; கைப்பொருள் போவதற்குக் காரணமான ஊழால் சோம்பல் ஏற்படும்.

சுதந்திர உதயன்

சுதந்திர சுந்தர உதயன்
சோபித உண்மையின் உதயன்
இதந்தரு அன்புடை உதயன்
ஏதமில் அகிம்சையின் உதயன்
விதந்திடும் ஞானமெய் உதயன்
விடுதலைப் போர்தனின் உதயன்
பதந்தரு பாரத உதயன்
பரங்குயர் காந்தியே உதயன்.

கவிஞர் அரியாலையூர்
வே. ஐயாத்துரை

* * * *

உலகோர் நெஞ்சில் உத்தமனாய் உறைந்தவர்

அகிம்சையெனும் ஆயுதத்தால் போர் புரிந்து
அகிலத்தை ஆட்டுவித்தான் அண்ணல் காந்தி
சத்தியத்தை லட்சியமாய் கையில் ஏந்தி
உத்தமனாய் உறைந்துவிட்டான் உலகோர்
நெஞ்சில்

பக்குவமாய் வாழ்வுதனை வாழ்ந்து காட்டிப்
பக்கிரியென் றன்னியரால் பேரும் ஈட்டி
பாரதத்தின் தலைப்புதல்வன் காந்தி யென்ற
பண்பாளன் பார்போற்றும்மகாத்மாதானே.

வ. யோகானந்தசிவம்

ஞானிகளின் நிலை!

பள்ளியில் படிக்கிற மாணவன் பல நாட்கள் படித்தாலும் தேர்வு எழுதிய பின் முடிவுக்காகக் காத்திருக்கின்ற மாதிரி ஒவ்வொரு மனிதனும் கடவுளின் அருளுக்காகக் காத்திருக்க வேண்டும்.

ஆறறிவு பெற்ற மனிதர்களுக்கும் குறைவான அறிவு பெற்ற விலங்கினங்களுக்கும் இடையேயுள்ள பெருத்த வேறுபாடு தெய்வத்தை அறியக் கூடிய இயல்பு உள்ளமைதான்.

விலங்குகளுக்கு உடலில் இயற்கையாகத் தோன்றுகிற பசி முதலான உணர்வுகளைத் தவிர வேறு உணர்ச்சிகள் அவற்றுக்கு இல்லை. மனிதனுக்குக் கிடைத்த பாக்கியம்இறையுணர்வு.

மனிதனுடைய நிலை உணர்ச்சி வசப்பட்ட நிலை. அதுவே இறைவன்பால் உண்டாகும்போது 'பக்தி' என்று சொல்லப்படுகிறது. மற்ற உணர்ச்சிகளுக்கு எல்லை உண்டு. பக்தி உணர்ச்சி அப்படி இல்லை. அதன் வளர்ச்சிக்கு முடிவில்லை

இறைவன்பால்கொண்டுள்ள உணர்ச்சிகள் என்கிற பாவபக்தி முதிர்ந்து இருக்குமானல் அதுவே ஞானம் எனப்படுகிறது.

மெய்யறிவு என்று பொருள்.

மகான்களும் ஞானிகளும் தங்கள் வாழ்க்கையை ஓரளவு விலங்குகளுக்கு ஒப்பாகவே பழக்கிக் கொண்டு விடுகிறார்கள். விலங்குகளுக்குக் கவலைகள், தேவைகள் இல்லாதது போலவே இவர்களுக்கும் இல்லை.

இயற்கை நடைமுறையில் விலங்குகளைப் போலவே வாழப் பயின்று, அதே நேரத்தில் அவற்றுக்கு இல்லாத இறையுணர்வையும் உள்ளூற வளர்த்துக் கொண்டு தங்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொண்டு, அது முடிந்ததும் மீண்டும் பிறவாத நிலையை எய்துகிறார்கள். *

ஞானக்கதிர்

டி.எஸ்.பி.

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
வீடியோ விஹொன்ஸ்
ஒளிப்பதிவாளர்
சி. இராஜராஜனின்
கலை நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல
நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்.
இல. 353 C, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

உதயன்

30 - 01 - 1987 வெள்ளிக்கிழமை

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHANS'
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
No. 353 C, Clock Tower Road,
JAFFNA.
(Near Wellington Junction)

வித்தாரம்

"என்ன முரளியார், வலு ஆறுதலாய் நடந்து வாறீர்? வழமையான அவசரத்தைக் காணயில்லை. என்ன ஹர்த்தாலோடை எல்லாரும் ஓய்ஞ்சதோடை நீரும் ஓய்ஞ்சிட்டீர் போலை?

இண்டைக்கு ஹர்த்தால் அரசாங்கத்துக்கு ஒரு பாடமாய் இருக்கட்டும் அவர் அச்சாணியார் விளக்கமாய் ஒருக்கா உளறினது உனக்குத் தெரியும் எல்லே? எரிபொருளைப் போராளியள் தான் பாவிக்கினம். அதனாலை யாழ்ப்பாணத்து மக்களும் எரிபொருள் தடைக்கு ஆதரவு எண்டு சொன்னவர்.

இப்ப என்ன சொல்லப் போறார்? பொடியங்கள் ஆயுத முனையிலை தூண்டித்தான் உப்பிடிப் போராட்டங்கள் நடக்குது எண்டு ஒரு கற்பனைக் கதை விடுவார்.

உவர் தான் பயங்கரவாதத்தைப் பற்றிப் புத்தகம் எழுதப்போறாராம். நல்லாத்தான் இருக்கும். தான் பந்தோபஸ்து அமைச்சராய் வந்த பிறகு எக்கச்சக்கமாய் பயங்கரவாதம் பற்றிய புத்தகங்களைப் படிச்சதாக ஒரு கூட்டத்திலை பீற்றி இருக்கிறார். உவர் மந்திரி வேலையை விட்டுவிட்டு புத்தகம் எழுதிற வேலையையும். முந்தின சட்டத்தரணி வேலையையும் செய்தார் எண்டால் அரசாங்கத்துக்கும் கொஞ்சம் நல்லது, தமிழ் மக்களுக்கும் கொஞ்சம் நிம்மதி.

அவரை விடு. எங்கடை விஷயத்துக்கு வருவோமே. இண்டையான் ஹர்த்தாலோடை ஆர்ப்பாட்ட ஊர்வலம் அது இது எண்டு வைச்சுப் பிரமாதப்படுத்தி இருக்கலாம். பிரசைகள் குழுக்கள் செய்யிறதெண்டா அரசியல் கலப்பில்லா விஷயம். ஊருக்கு ஊர் இருக்கிற பிரசைகள் குழுக்கள் சரியானபடி இயங்கினால் குடாநாடு முழுவதும் ஊர்வலம், ஹர்த்தால் நடத்தி எங்கடை எதிர்ப்பைக் கொஞ்சம் பெரிசாக் காட்டியிருக்கலாம்.

என்ன பத்திமூண்டோடை ஊருக்கு ஊர் பிரசைகள் குழுக்கள் முளைச்சன. பிறகு இப்ப பாத்தால் அவை உஷாராய் வேலை செய்வதாய் தெரியயில்லை. எல்லாப் பிரசைகள் குழுக்களும் எண்டில்லை, சில குழுக்கள் சோம்பேறித்தனத்தின் அடையாளச் சின்னங்களாய் இருப்பதாக அன்பர் ஒருவர் குறைப்பட்டார்.

சில சங்கங்கள் நிர்வாகிகளின்ரை உட் சண்டையள் காரணமாய் மந்தம் கண்டதாகவும் ஒரு குற்றச்சாட்டு ஆரம்பத்திலை நிவாரணப் பொருள்கள் பகிர்ந்து குடுக்கிற பணி நடக்கயிக்கை இருந்த ஆர்வம் அக்கறை இப்ப இல்லையாம்.

சீனாவிலை மாணவர் ஆர்ப்பாட்டம், பிலிப்பைன்ஸிலை விவசாயிகள் ஆர்ப்பாட்டம் எண்டு நடந்தது ... ரீ. வியிலை பாத்தியே? எவ்வளவு சனம் எண்டு. பாக்கிறதுக்கு ஒரு "இம்பாக்ட்" ஏற்படுத்தும்.

பிரசைகள் குழுக்கள் செய்யிற ஹர்த்தாலோடை ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் ஊர் ஊராய் நடத்தியிருந்தா அரசாங்கத்தின் அட்டூழியங்களை யாழ் குடாநாட்டு மக்கள் எந்தளவுக்கு வன்மத்தோடை எதிர்க்கினம் எண்டதை உலகத்துக்குக் காட்டியிருக்கலாம். சரி விடு இனியாவது அரசாங்க எதிர்ப்பு இயக்கங்களை 'ஓர்கனைஸ்' பண்ணுறவை சரியாய் பண்ணப் பழகட்டும் ...!



நாம் இந்தியாவில் நம்பிக்கை இழக்கவில்லை

அது எமது நண்பன்

அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார்

சென்னை, ஜன 29

நாம் இந்தியாவில் நம்பிக்கை இழக்கவில்லை. இந்தியா எமது நண்பன். இந்தியாவின் மத்தியஸ்த பங்கு எமக்குத் தேவை.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

பிராந்திய வல்லரசு என்ற இந்தியாவின் நிலையை நாம் அங்கீகரிக்கிறோம். அதன் புவியியல் நலன்களை நாம் மதிக்கிறோம் இந்திய மத்தியஸ்தம் நீடிக்கும் எமது இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை. நாம் இந்தியாவில் நம்பிக்கை இழக்கவில்லை.

நாம் சுதந்திர இறைமையுள்ள நாடு ஒன்றுக்காகப் போராடுகின்றோம்

இந்த லட்சியத்திற்காக எமது போராளிகள் பலர் தியாகம் செய்துள்ளனர் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் இதற்காக உயிரிழந்தனர்.

சுதந்திர தமிழ் ஈழம் கோரிக்கையை நாம் கைவிட வேண்டும் என்றால் எமது மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய விஷயம் நிறைந்த வரையறை கொண்ட தீர்வு வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசு இதுவரை அப்படிப்பட்ட யோசனைகளைச் சமர்ப்பிக்கவில்லை.

தமிழர் தாயகம் என்ற கோரிக்கையைக் கூட ஸ்ரீலங்கா அரசு அங்கீகரிக்கவில்லை.

ஆகவே எந்த அரசியல் தீர்வுக்கும் நாம் இணங்க மறுக்கிறோம் என்று கூறுவதில் உண்மையில்லை

எமது மக்கள் சுதந்திரத்துடனும் பாதுகாப்புடனும் சுயமரியாதையுடனும் வாழுவதை உறுதிப்படுத்தும் நிரந்தரத் தீர்வையே நாம் நாடுகிறோம்.

எமது நிலை தெளிவானது

இந்தியாவைத் திருப்தி செய்ய எம்மால் முடியும். ஆனால் ஜெயவர்த்தனாவைத் திருப்திசெய்ய எம்மால் முடியாது

மக்களின் தேசிய நலன்களைக் கருத்திற்கொண்டே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இயங்குகின்றது

மக்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் நாமே

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண இந்தியா நல்லான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பேச்சுக்களுக்கு தேவையான பொது அடிப்படை ஒன்றைக் காணுவதே இந்தியாவின் முயற்சி.

துரதிருஷ்டவசமாக கணிசமான அரசியல் யோசனை ஒன்றை ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பிக்கத் தவறிவிட்டது.

அப்படிச் சமர்ப்பித்திருந்தால் சமாதான முயற்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளும் பங்கேற்று இருக்க முடியும்.

இப்படி திரு அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார். (இ-எ)

புலி இயக்க போராளி வீர மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 30

பருத்தித்துறையின் ஆய்வு ஒன்றை மேற்கொண்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்த பவுன் (மா, குணசிங்கம் நாவலடி உடுப்பிட்டி) வீர மரணம் அடைந்தார்

இவருக்கு தமது வீர வணக்கத்தைத் தெரிவிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

ஓய்வூதியக்காரருக்கு இலங்கைவங்கிக் காசோலை

ரயில்வே திணைக்கள ஓய்வூதியம் பெறுவோருக்கும் ஜனவரிமாத ஓய்வூதியத்தை இலங்கை வங்கிக் காசோலைமூலம் வழங்க யாழ் அரச அதிபர் திரு வி. எம். பஞ்சலிங்கம் ஏற்பாடு செய்து உள்ளார்

மக்கள் வங்கிக் கிளைகள் செயற்படாது இருப்பதைத் தொடர்ந்தே இந்த மாற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

சுன்னாகம், சங்கானை, காங்கேசன்துறை. கன்னாதிட்டி ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமையும்,- நவீன சந்தை. பிரதான வீதி. ஸ்ரான்லி வீதி சாவகச்சேரி, வல்வெட்டித்துறை. பருத்தித்துறை, ஊர்காவற்றுறை ஆகிய மக்கள் வங்கிக் கிளைகளில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் - யாழ். செயலகத்தில் வைத்து இலங்கை வங்கிக் காசோலைகள் வழங்கப்படும்

ஜனவரி வாதத்துக்கு உரிய ஓய்வூதியப் பற்றுச்சீட்டு, ஓய்வூதிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் யாழ் செயலகத்துக்கு குறிப்பிட்ட திகதிகளில் வரும்படி யாழ் அரச அதிபர் கோரியுள்ளார். (இ-எ)

புலிகளின் ...

வெளியில் இப் பரீட்சார்த்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது

ஏராளமான மக்கள் விமானம் பறக்கும் முயற்சியை பார்வையிடக் காத்து நின்றனர்.

அதிகளவு பிரகாசம் கூடிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டு அதன் வெளிச்சத்திலேயே விமானம் ஓடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தரையில் சிறிது தூரம் ஓடவிடப்பட்ட பின்பு விமானம் மீண்டும் புலிகளினால் எடுத்துச் செல்லப்பட்டது.

வாகனப் போக்குவரத்துகளும் இதனால் சில மணி நேரம் ஸ்தம்பித நிலையில் இருந்தன. (இ-10)

இருபது ...

1ஆம்பக்கத்தொடர்ச்சி)

அறிவிக்கப்படுகிறது.

நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் 14 கொமாண்டோக்களும்,

புலிகளின் பீரங்கித் தாக்குதலில் படகு ஒன்றில் சென்றுகொண்டிருந்த 6 கொமாண்டோக்களும் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

கொக்கட்டி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லப்பட்டனர்.

அதே சமயம் மட்டுநகரின் மற்றைய பகுதிகளைச் சுற்றிவளைக்க தாண்டியடி முகாமை சேர்ந்த கொமாண்டோக்களும் வந்துகொண்டிருந்த சமயம் காலை 8-30 மணியளவில் எமது வீரர்கள் பலத்த நேரடி மோதலைத் தொடுத்தனர்.

பல மணி நேரம் இடம் பெற்றசமரில் கொமாண்டோக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

ஏனைய முகாம்களில் இருந்துவந்த கொமாண்டோக்கள் மட்டுநகரின் வெளிப்பகுதியிலேயே தங்கிவிட்டனர்.

கொமாண்டோக்களுக்கு உதவியாக ஹெலிக்கொப்டர்களும், குண்டுவீச்சு விமானங்கள் சிலவும் தாக்குதலை மேற்கொண்டன.

இவற்றிற்கு எதிராக எமது வீரர்கள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலை அடுத்து இறுதியில் அவையும் பின்வாங்கின.

எமது வீரர்களின் கடுமையான எதிர்த்தாக்குதலால் கொமாண்டோக்கள் தரப்பில் பலத்த உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன.

மட்டுநகரை முற்றுகையிட வந்த கொமாண்டோக்களின் எண்ணமும் கைகூடவில்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

50 அப்பாவித் தமிழர் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைப் படையினர் பணயக் கைதிகளாக வைத்துள்ளனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

20,000 பேர் காடுகளில்

கொக்கட்டிச்சோலைக் கிராமத்தைச் சுற்றியுள்ள பதினைந்து கிராமங்களைச் சேர்ந்த சுமார் 20,000 மக்கள் காடுகளுக்குள் ஒளிந்துள்ளனர்.

தப்பியோடும் சிவிலியன்கள் மீதும் ஹெலிக்கொப்டர்களிலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

ஹெலிக்கொப்டர்களில் இருந்து ரொக்கட் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

உ

திருமண அழைப்பு

மணமகன்: செல்வராஜன்
B.Sc. Eng. (Civil)
நீர்ப்பாசன பொறியியலாளர், கிளிநொச்சி
மணமகள்: பவதாரிணி
இடம்: சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலய மண்டபம் (மனோகரா சினிமா முன்பாக)
காலம்: 31-1-1987 சனிக்கிழமை
பகல் 12.30 மணி முதல் 12 50 மணிக்குள் வரும் மேட லக்கின சுப முகூர்த்தம்

தங்கள் அன்பையும், நல்வரவையும் நல்லாசியையும் விழையும்

சு. செல்லத்துரை தம்பதியர்
இளைப்பாறிய ஆசிரியர்
41/1A, ஈச்சமோட்டை ரோட், யாழ்ப்பாணம்.

மயில். அமிர்தலிங்கம் தம்பதியர்
உதவி காணி ஆணையாளர் கிளிநொச்சி,
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

* அன்பர்கள் யாவரும் இவ்வழைப்பை ஏற்று வருகை தந்து சிறப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

மயில். அமிர்தலிங்கம்

எரிந்துகொண்டு.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் பலியானார்.

நாம் சைக்கிள்களை அப்படியேபோட்டுவிட்டு றோட்டில்படுத்து விட்டோம்

எம்மில் சிலர் ஓடமுற்பட்ட பொழுது காட்டுக்குள் இருந்துவெளியே வந்த சிப்பாய்கள் அவர்களைக் கைதுசெய்து கட்டனர்.

அதன் பின்னர் வீதியில் படுத்திருந்த எம்மீதும் சிப்பாய்கள் சுட்டதில் மூன்றுபேர் அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்தனர்-

எனக்கு காலில் மட்டுமே காயம் ஏற்பட்ட நான் சத்தவன் போல்து கிடந்துவிட்டேன்.

சடலங்கள் மீது ஊற்றி கொளுத்தினர்

பின்னர் எமது சைக்கிள்களில் கட்டப்பட்டிருந்த எரிபொருள் கலன்களை அவிழ்த்து எடுத்த சிப்பாய்கள் டிராக்டரில் கிடந்த இரு சடலங்கள் மீதும் ஊற்றிக் கொழுத்தினர்.

தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த பொழுது எனக்கு அருகில் கிடந்த எனது சகாக்கள் மூவரின்சடலங்களையும் தூக்கி அந்த நெருப்பினுள் போட்டனர்.

மேலும் உயிருடன் பிடித்து வைத்திருந்த ஒருவரையும் சிப்பாய்கள் எரிந்து கொண்டிருந்த நெருப்பினுள் தூக்கிப் போட்டனர்.

என்னுடன் கூட வந்தவர்களில் அண்ணனும் தம்பியும் அடங்கி இருந்தனர்

சிப்பாய்கள் சுட்டதில் அண்ணன் இறந்து விட்டார் பதுங்கியிருந்த தம்பியே சிப்பாய்களிடம் உயிருடன் பிடிபட்டு எரியும் நெருப்பில் தூக்கிப் போடப்பட்டார்.

இறுதியில் என்னையும் தூக்கி நெருப்பில் போட முற்பட்ட போழுதுநான் எனது கஷ்டங்களை விளங்கப் படுத்தி நாங்கள் விவசாயிகள் என்றும் தோட்டம் செய்வதற்காகவே எரிபொருள் வாங்கிச் செல்கிறோம் என்று சொன்னேன். "கொட்டியா" இல்லை என்றும் அவர்களிடம் சிங்களத்தில் மன்றாட்டமாகச் சொன்னேன்.

அதே நேரம் அந்த இடத்துக்கு வந்த உயர் அதிகாரி ஒருவர் என்னை நெருப்பில் போடவேண்டாம் என்று ஏனையோருக்கு கட்டளையிட்டு விட்டுசென்று விட்டார்.

இதனை அடுத்து சிப்பாய்கள் எனக்கு பானம் குடிக்கத்தந்து என்னைப் போகுமாறு கூறிவிட்டு காட்டினுள் சென்று விட்டனர்.

சுமார் ஒரு மணி நேரமாக எதுவும் செய்ய முடியாத நிலையில் எரிந்து கொண்டிருந்த சடலங்களையும் டிராக்டரையும் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அதன் பின்னர் நான் தவழ்ந்து சென்று எனது சைக்கிளை எடுத்து ஒற்றைக் காலினால் மட்டும் இரண்டு மைல்களுக்கு சைக்கிளை ஓடிச் சென்ற போது வழியில் மயங்கி விழுந்தேன்.

இப்படி அவர் சொன்னார்.

இவருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

இறந்தவர்கள் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர் தெரிவித்தார் (இ-10)

வெள்ளியன்று இறைச்சிக் கடை மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 30

சகல இறைச்சிக் கடைகளும் இனிமேல் வெள்ளிக் கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.

யாழ் மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது. (இ-10)

திமைக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ந்தே நான் உறுதிக்கு வந்திருக்கிறேன்.

நான் எவ்வளவுக்கு எவ்வளவு பரிசுத்தனாக வரவேண்டுமென முயற்சி செய்கிறேனோ அவ்வளவுக்கு அவ்வளவு நான் கடவுளுக்கு அருகில் வருவதாக எனக்குத் தோன்றுகிறது.

எனது நம்பிக்கையானது இமயமலை போலாகி அதன் சிகரங்களில் உள்ள பனிக் கட்டிகளைப்போல் எனது மனமும் பரிசுத்தமாகும் பட்சத்தில் நான் எவ்வளவுதூரம் இறைவனுக்கு அருகில் இருப்பேன்!

'நாவலர் குரல்' வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 30

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணி மன்றத்தின் ஆதரவில் "நாவலர் குரல்" என்ற நாவலர் குருபூசை மலர் வெளியீட்டு விழா திருநெல்வேலி கலா மன்ற மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிறு காலை நடைபெறும்.

வைபவத்திற்கு கலாநிதி சி. க. சிற்றம்பலம் தலைமை வகிப்பார்.

யாழ் நல்லை ஆதீனம் சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள், சிவதர்ம வள்ளல் க. கனகராசா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் வெளியீட்டுரையையும் மலரையும் வெளியிட்டு வைப்பார்,

ஷ்ரொ. உதயன் முகாமைப் பணிப்பாளர் திரு. ஈஸ்வரபாதம் சரவணபவன் தம்பதிகள் திரு க. கனகராசா ஆகியோர் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்வர்.

திருமதி. மங்கயர்க்கரசி திருச்சிற்றம்பலம், பண்டிதர் மு. கந்தையா திரு. சி. சிவமகாராசா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர் (இ-எ)

சுன்னாகத்தில் ஹர்த்தாலுக்கு முழு ஆதரவு

சுன்னாகம், ஜன. 30

இன்று யாழ் குடா எங்கும் நடைபெறும் ஹர்த்தாலில் சுன்னாகம் மக்களும், வர்த்தகர்களும் கல்லூரி மாணவர்களும் பொது ஸ்தாபனங்களும் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

சுன்னாகம் பிரசைகள் குழுத்தலைவர் திரு. தி. மாணிக்கவாசகரிடம் சுன்னாகம் வர்த்தகர்கள், மாணவர் சங்கத் தலைவர்கள், கைத்தொழில் நிறுவன அதிபர்கள், பொது ஸ்தாபனப் பிரதிநிதிகள் ஆகியோர் கூட்டாகச் சந்தித்து இன்று நடைபெறும் கடையடைப்பும் ஹர்த்தாலும் பூரண வெற்றிபெற தமது நல்லாதரவை தெரிவித்தனர். (இ-27)

உ

ஸ்ரீசிவ நாகபூஷணி துணை

திருமண அழைப்பு

மணமகன்: மு. கா. இராமலிங்கம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன்
கணேசலிங்கம்
(அரச புனருத்தாரண வைத்தியசாலை, நாகம)
மணமகள்: இளையதம்பி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி
விமலாதேவி
இடம்: நல்லை ஞானசம்பந்தர் ஆதீன திருக்கோலமண்டபம்
காலம்: சனிக்கிழமை 31-01-1987
நண்பகல் 11 30 — 12-30

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை விரும்பும்

மு. கா. இராமலிங்கமும், பிள்ளைகளும்
'ஸ்ரீ நயினைப்பதி'
செட்டி கிணற்றடி,
நீர்வேலி.

அ. இளையதம்பி தம்பதிகளும்,
வி. சின்னத்துரை
(மாமா)
73, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

V.J.S.
EXPRESS
யாழ். - கொழும்பு - யாழ்.
பருத்தித்துறை - கொழும்பு-
பருத்தித்துறை
அநேக பிரயாணிகளின் வேண்டுகோளுக்கிணங்க எமது மற்றுமோர் புதிய சேவை:
01 - 02 - 1987 முதல்
பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி. கொடிகாமம் ஊடாக கொழும்புக்கு மற்றுமோர் புதிய சௌகரியமான சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.
ஒரு வழிக் கட்டணம்: 160/-
புறப்படும் நேரம்:
பருத்தித்தித்துறை: காலை 7-00 மணி
மந்திகை : காலை 7-15 மணி
நெல்லியடி ; காலை 7-30 மணி
யாழ்ப்பாணம்-
சிறிமகள் ஸ்ரோர்ஸ்: காலை 7-30 மணி
ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:
1. பருத்தித்துறை: சந்தை, பஸ் நிலையம் என்பவற்றிற்கு அருகாமையில் 28-1-87 முதல் எமது ஆசனப் பதிவு செய்யும் காரியாலயம் இயங்கும்.
2 மந்திகை: இலங்கை வங்கி முன்பாக எமது ஆசனப் பதிவு செய்யும் காரியாலயம் இயங்கும்.
3. நெல்லியடி: பொன்னம்பலம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்:
1. சிறிமகள் றேடர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23572
2. 113, பிரதான வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி: 24204
கொழும்பில் ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:
1. அசோகா லாட்ஜ் 169, செட்டியார் தெரு கொழும்பு.
2. நியூ ஹைஸ்ரார் 246 காலி வீதி, கொழும்பு. தொலைபேசி: 500767
3. ராம்ஜி லொட்ஜ், 361, காலி வீதி, பம்பலப்பிட்டி, தொலைபேசி: 501543
காரியாலயம்:
113, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24204
தலைமைக் காரியாலயம்:
41, விவேகானந்த ரோட், கொழும்பு-6.
தொலைபேசி: 500748

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 30 - 01 - 1987 தொலைபேசி இல. 24805, 22078
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 50, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ. 60 N 86. Telephone. 24805, 22078.